පාර්ලිමේන්තු ප්‍රකාශන මාලා අංක-489

ආයතනයේ නම- අපනයන කෘෂිකර්ම දෙපාර්තමේන්තුව

පාර්ලිමේන්තුවේ රජයේ ගිණුම් පිළිබඳ කාරක සභාව විසින් සභාගත කරන ලද වාර්තා

සම්බන්ධයෙන් ස්ථාවර නියෝග අංක 119(4)යටතේ ගරු අමාත්‍යවරයාගේ නිරීක්ෂණ හා

ගනු ලබන පියවර

පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කිරීම

பாராளுமன்றவெளியீட்டுதொடர் இலக்கம் - 489

நிறுவனத்தின் பெயர் : ஏற்றுமதிவிவசாயத் திணைக்களம்

பாராளுமன்றத்தில் அரசகணக்குகள் தொடர்பானசெயற்குழுவினால் முன்வைக்கப்பட்ட அறிக்கை

தொடர்பாகநிலையானகட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் கௌரவஅமைச்சரதுஅவதானிப்புக்கள் மற்றும்

மேற்கொள்ளப்பட்டநடவடிக்கைகள்

பாராளுமன்றத்திற்குசமர்ப்பித்தல்.

Parliamentary Session No-489

Name Of the Institution- Department Of Export Agriculture

Presenting observations and actions taken regarding the report submitted to

Parliament by the Committee on Public Accounts in terms of Standing

Order No 119(4).

| | |
|---|---|
| 4. தகவல் தொழில்நுட்ப அமைப்பை திறனாக பயன்படுத்துவதில் உள்ள பிரச்சினைகள்<br>4.1 ஏற்றுமதி விவசாயத் திணைக்களம் | இந்த டெப்லட் கணனிகள் 300 இனை கொள்வனவு செய்தல் மற்றும் கணனி மென்பொருள் ஒன்றினை தயாரித்தல், கறுவா பயிர் தொடர்பாக புவியியல் குறியீடு ஒன்றினை தாயரித்தல் என்பவற்றிற்காக கொள்வனவு செய்யப்பட்டது. ஆயினும் இப்போது கறுவா பயிர் வேறு ஒரு திணைக்களமாக ஸ்தாபிக்கப்பட்டுள்ளதால் திணைக்களத்தின் ஏனைய பயிர அபிவிருத்திக்கும் மற்றும் திணைக்களத்திற்கு உரிய ஏனைய பயிர்களை பதிவு செய்தலுக்கு உரிய மென்பொருளை உட்படுத்தி பயன்படுத்துதல், Zoom தொழில்நுட்பத்தை பயன்படுத்தி நடாத்தப்படுகின்ற வேலைத்திட்டங்கள் பொருட்டு பயன்படுத்துதல், You tube போன்ற சமூக ஊடகங்களுக்கு பயன்படுத்தி பயிர் விரிவர்கள் நடவடிக்கைகளை விஸ்தரித்தல், முன்னேற்ற கண்கானிப்பு, தொடர்பாடல் மற்றும் புதிய தொழில்நுட்ப அறிமுகம் போன்றன உள்ளடங்கலாக திணைக்களத்தின் கருத்திட்ட நடவடிக்கைள் பொருட்டு உத்தியோகத்தர்களினால் ஏற்கனவே திறனாக பயன்படுத்தப்பட்டு வருகின்றன என்பதை அன்புடன் குறிப்பிட விரும்புகின்றேன். அவ்வாறே எற்கனவே அமைச்சின் ஊடாக இக்கணனிகள் 300 இனை கொள்வனவு செய்தல் மற்றும் கணனி மென் பொருள் தயாரித்தல் தொடர்பாக விசாரைணை ஒன்று மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதை அன்புன் அறியத் தருகின்றேன். |
| 01. ஏற்றுமதி வருமான இலக்கை அடைந்து கொள்ளும் பொருட்டு திட்டங்களை தயாரித்தல் | 2025 ஆம் ஆண்டு முதல் அபிவிருத்தி மற்றும் கருத்திட்ட நடவடிக்கைகள் பொருட்டு அரச கணக்கு செயற்குழுவின் சிபாரிசுக்கு அமைய 2025 □ 2030 ஆம் ஆண்டு வரையிலான ஐந்தாண்டு திட்டமிடல் தயாரிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டு வருகின்றன. அதற்கு அமைய 2025 ஆம் ஆண்டு முதல் அந்தந்த பயிர்களுக்கு உகந்த நிலத்தை இனங்கண்டு அந்த நிலத்தை கேந்திரமாகக கொண்டு ஏற்றுமதி விவசாய பயிர் உற்பத்தி தொடர்பாக கொத்தனி கிராமங்கள் 200 வேலைத் திட்டத்தை செயற்படத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் மாவட்ட மட்டத்தில் ஏற்கனவே செயற்படுத்தப்பட்டுள்ளன. இந்த திணைக்களத்திற்கு உரிய விவசாய பயிர் மேம்பாட்டின் பொருட்டு கூட்டிணைந்த திட்டமிடல்கள் தயாரித்து அமைச்சுக்கு மற்றும் பாராளுமன்ற செயற்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. திணைக்களத்தின் 2025 □ 2029 அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தயாரிக்கப்பட்டு தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் அனுமதியை பெற்று எதிர்பார்த்த இலக்கை அடைந்து கொள்வதற்கு தேவையான |

| | |
|---|---|
| | அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதை அன்புடன் அறியத் தருகின்றேன். |

| | |
|---|---|
| 02. வல்லப்பட்டை தாவரத்தை நடுதல் அல்லது ஏற்றுமதி செய்தல் | தற்போது 1992 இன் 46 ஆம் இலக்கம் கொண்ட ஏற்றுமதி விவசாயத் தொழிலை மேம்படுத்துதல் சட்டத்தின் திருத்தப்பட்ட வரைவு சட்டமா அதிபரின் மூலம் அனுமதிக்கப்பட்டது. இந்த திருத்தச் சட்டம் ஏற்கனவே விவசாய அமைச்சினால் அமைச்சரவையின் அனுமதியின் பொருட்டு சமர்ப்பிக்கப்படுவதற்காகவுள்ளது.<br>அவ்வாறே வல்லப்பட்டை தாவரம் ஏற்றுமதி விவசாய திணைக்களத்திற்கு கையகப்படுத்தி தருமாறு விவசாய அமைச்சினால் இதுவரை அறியத் தரப்படவில்லை |
| 03. அரச துறைக்கு அல்லது தனியார் துறைக்கு சொந்தமான நிலத்துண்டுகள் 29 இனையும் கையகப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல். | இந்த திணைக்களத்தின் காணிகள் தொடர்பாக கையகப்படுத்தும் நடவடிக்கைகள் மற்றும் தொடர்பாகவுள்ள நிறுவனங்கள் தொடர்பில் மற்றும் தொடர்புறுகின்ற ஏனைய நிறுவனங்கள் பிரதேச இணைப்புச் செய்யும் குழு ஒன்றுகூடலின் போது அறியப்படுத்தப்பட்டு காணிகளை கையகப்படுத்தும் நடவடிக்கைகள் விரைவுபடுத்தி தருமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளன. சகல காணிகளுக்கும் உரிய பிரதேச இணைப்புக்குழு செயலாளருக்கு ஏற்கனவே இது தொடர்பில் எழுத்து மூலம் அறியக் கொடுக்கப்பட்டுள்ளது என்பதை அன்புடன் அறியத் தருகின்றேன்.<br>அவ்வாறே காணியை கையகப்படுத்திக் கொள்வதற்கு உரிய செயலாற்றுகை இணைப்பு இலக்கம் 1, 2 மற்றும் 3 இன் ஊடாக அன்புடன சமர்ப்பிக்கின்றேன். |
| 04. டெப் கணனிகள் 300 இனை கொள்வனவு செய்தல் மற்றும் கணனி மென் பொருள் தயாரிக்கும் பொருட்டு பாரிய செலவினை மேற்கொண்டு இருந்ததுடன் அதன் மூலம் எதிர்பார்த்த பெறுபேறு கிடைக்கப் பெறாமை | 2025 ஏப்ரல் மாதம் 01 ஆம் திகதி அன்று இடம்பெற்ற திணைக்களத்தின் கணக்காய்வு முகாமைக்குழு ஒன்றுகூடலின் போது இந்த டெப்லட் கணனிகள் திணைக்களத்தின் ஏனைய பயிர்களின் அபிவிருத்தி மற்றும் பயிர் விரிவாக்கள் நடவடிக்கைள் பொருட்டும் திறனாக பயன்படுத்திக் கொள்வதற்கு அமைச்சின் செயலாளரது முறையான அனுமதியை பெற்றுக் கொள்ள வேண்டும் எனவும், அதன் நிமித்தம் நியமனம் செய்யப்படுகின்ற குழுவினால் அறியக் கொடுக்கப்பட்டுள்ளதாகவும், அது தொடர்பாக அமைச்சரினால் நியமிக்கப்படுகின்ற குழுவினால் அடுத்த நடவடிக்கைகள் |

| | |
|---|---|
| | திறனாக பயன்படுத்திக் கொள்வதற்கு அமைச்சின் செயலாளரது முறையான அனுமதியை பெற்றுக் கொள்ள வேண்டும் எனவும், அதன் நிமித்தம் நியமனம் செய்யப்படுகின்ற குழுவினால் அறியக் கொடுக்கப்பட்டுள்ளதாகவும், அது தொடர்பாக அமைச்சரினால் நியமிக்கப்படுகின்ற குழுவினால் அடுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அன்புடன் அறியத் தருகின்றேன். |

S.B.U.S.K. Ranaweera
Additional Director General (...)
Department of Export Agriculture
1095, Sirimavo Bandaranayake Mawatha,
Peradeniya.

எஸ்.பீ.யூ.எஸ்.கே. ரணவீர,

மேலதிகபணிப்பாளர் நாயகம் அபிவிருத்தி,

பணிப்பாளர் நாயகம் சார்பாக,

ஏற்றுமதிவிவசாயபணிப்பாளர்.

செயலாளர்,

விவசாயஇ கால்நடை வளங்கள்இ

காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு

D.P. Wickramasinghe
Secretary
Ministry of Agriculture, Livestock, Lands & Irrigation
80/5, "Govijana Mandiraya", Rajamalwatta Road
Battaramulla.